Poomphuar
Hand in hand with our artisans...

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**
**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

**தொலைபேசி**: 28521271, 28521325
28521798, 28525094

**வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது**
**2025–2026**

புகைப்படம்

விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | கைவினைஞரின் பெயர் 1) தமிழ்<br>2) ஆங்கிலம் | : | திரு/திருமதி/செல்வி<br>Thiru/Tmt/Selvi |
| 2. | தந்தை / கணவர் / பாதுகாவலர் பெயர் | | |
| 3. | தொடர்புக்குரிய விலாசம் மற்றும் தொலைபேசி எண். | : | |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது (சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 5. | ஆண் / பெண் / இதர பாலினம் | | |
| 6. | விண்ணப்பதாரர் மாற்றுத்திறனாளியா? ஆம் எனில் – அரசு மருத்துவரின் சான்றிதழை இணைக்கப்பட வேண்டும் | | |
| 7. | கல்வித் தகுதி (தகுந்த சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8. | கைத்திறன் தகுதி (தகுந்த சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 9. | ஆதார் எண். (நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 10. | வங்கி கணக்கு எண். (முதல் பக்கம் நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 11. | தொழிற்கல்வி கற்ற விவரங்கள் (பாரம்பரிய முறை / குருகுல முறை / தனி நிறுவனங்கள்) | : | |

| | | | |
|---|---|---|---|
| **12.** | கைவினைஞர் செய்து வரும் கைத்திறத் தொழிலின் பெயர் | : | |
| **13.** | இந்தத் துறையில் அனுபவம் (எத்தனை ஆண்டுகள்) | : | |
| **14.** | "வாழும் கைவினைப் பொக்கிஷம்" –<br>1. விருதினை பெற இக்கைவினைத் தொழிலில் தங்களுக்குரிய சிறந்த தனித்துவமிக்க கலைத்திறமை.<br>2. தங்கள் கைவண்ணத்தில் உருவான சிறந்த படைப்புகள்.<br>3. தங்களுக்கு கிடைத்த பாராட்டுகள் மற்றும் விருதுகள்.<br>4. இக்கலையில் செய்த சேவைகள்.<br>5. இக்கலையை பிறர்க்கு பயிற்றுவித்த விபரங்கள்.<br>6. இக்கலை அழியாமல் தொடர்ந்து நிலைபெறவும், வளர்க்கவும், அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லவும் தாங்கள் ஆற்றிய பணிகள்.<br>மேற்கண்ட விபரங்கள் கொண்ட ஒரு சுய குறிப்பு இணைக்கவும்.<br>மேற்கண்ட தங்களுடைய பொருள் குறித்து கலை ஆர்வலர் / தனிப்பட்ட முறையில் அறிந்தவர் ஆகியோருடைய சான்றிதழ்கள் இருப்பினும் இணைக்கவும். | : | |
| **15.** | இத்துறையில் கைவினைஞரின் சேவை | : | |
| | அ) தாங்கள் தயாரித்த பொருட்களில் மிகச் சிறந்த பொருட்கள் என பாராட்டுப் பெற்றவை ஏதேனும் இருப்பின் புகைப்படம் மற்றும் பிற ஆதாரங்களுடன் | : | |
| | ஆ) கலந்துக்கொண்ட கண்காட்சிகளின் விவரங்கள் | : | |
| | இ) தங்களது சிறந்த படைப்புகள் எங்கெங்கு வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் | : | |
| | ஈ) அயல்நாடுகளுக்கு ஏதேனும் பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தால் அதன் விபரம் | : | |
| | உ) பாரம்பரிய கைத்திறத் தொழிலில் வடிவமைப்புகளை உருவாக்கும் திறன் படைத்தவரெனில் அதன் விபரங்கள் | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஊ) | புதியதாக பொருளை உருவாக்கும் திறன் படைத்தவரெனில் அதன் விபரங்கள் | : | |
| | எ) | இந்தக் கைத்திறத் தொழிலின் வளர்ச்சிக்கு கைவினைஞர் ஆற்றிய பணிகள்/மேற்கொண்ட பயிற்சி வகுப்புகளின் விபரங்கள் | : | |
| | ஏ) | மாநில, தேசிய அல்லது வேறு ஏதேனும் விருது பெற்றவரா? (இருப்பின் அதன் விபரங்கள்) | : | |
| | ஐ) | கைவினைஞரின் பணிகள் குறித்து தொலைகாட்சி / நாளிதழ் வார & மாத இதழ்களின் கட்டுரை வந்திருந்தால் அதன் விபரங்கள் | : | |
| | ஒ) | இதற்கு முன் விண்ணப்பதாரர் எத்தனை முறை இவ்விருதிற்காக விண்ணப்பித்துள்ளார் | : | |
| **16.** | சிற்ப சாஸ்திரம் / கலைத்திறன் தொடர்பான அறிவுடைமை (ஆதாரங்கள் இருப்பின் இணைக்கவும்) | | : | |

மேற்கண்ட விபரங்கள் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் உறுதியளிக்கிறேன்.

கைவினைஞரின் கையொப்பம்

நாள் :

இடம் :

| |
|---|
| புகைப்படம்<br>(பரிந்துரை அலுவலர் கையெழுத்துடன்) |

## பரிந்துரைச் சான்றிதழ்

1. திரு/திருமதி/செல்வி..................................................................,.... அவர்களால் 2025–26–ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுக்காக அளிக்கப்பட்ட பொருள் / பொருட்கள் ........................................................................... கைத்திறன் தொழில் பெயர் .................................................................... அவரால் சொந்தமாக தயார் செய்யப்பட்டது என்றும்,
2. தேர்வுக்குரிய கைவினைப் பொருளை தயாரிப்பது என்னால் நேரடியாக பார்வையிடப்பட்டு உறுதி செய்யப்பட்டது என்றும்,
3. இதற்காக ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) மதிப்புள்ள முத்திரைத்தாளில் முதல் நிலை குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) முன்னிலையில் உறுதி வாக்கு மூலம் பெற்று இணைக்கப்பட்டுள்ளது என்றும்,
4. மேற்கண்ட கைவினைஞரை ... .. .. .. ஆண்டுகளாக நன்கு தெரியும் என்றும்,
5. கீழே காணப்படும் கையொப்பம் மேற்கண்ட கைவினைஞரால் என் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது என்றும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

கைவினைஞரின் கையொப்பம்

நாள் :

இடம் :

பரிந்துரை செய்யும்
அலுவலரின் பெயர்
அலுவலக முத்திரையுடன்

### குறிப்பு

பூம்புகார் விற்பனை நிலைய மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்கள் / புதுடெல்லி அபிவிருத்தி ஆணையர் அலுவலகத்தைச் சார்ந்த அந்தந்த பகுதி உதவி இயக்குநர்கள் (கைத்திறன்) / கிராப்ட் கவுன்சில் (தமிழ்நாடு/இந்தியா/உலகம்) ஆகிய யாராவது ஒருவரால் புகைப்படத்தில் கையொப்பமிட்டு பரிந்துரை செய்யப்படவேண்டும்.

**ரூபாய் 100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது போட்டியில் கலந்துகொள்ளும் கைவினைஞர் அளிக்கவேண்டிய உறுதி மொழி பத்திரம்**

(சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பம் மற்றும் முத்திரையுடன்)

திரு/திருமதி/செல்வி........................................................த/பெ.......................... ஆகிய நான் 2025–26–ஆம் ஆண்டு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுக்காக என்னால் வைக்கப்பட்டிருக்கும் கைவினைப்பொருள்.................................................... கைத்திறன் தொழில் பெயர் .................................................................................... என்னால் செய்து முடிக்கப்பட்டது என்று உறுதி அளிக்கிறேன். இக்கைவினைத் தொழிலை நான் ..................... வருடங்களாக செய்து வருகிறேன். இதுவரையிலும் நான் வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது பெறவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

மேற்கூறப்பட்டுள்ள என்னுடைய உறுதிமொழி மற்றும் விண்ணப்பத்திலுள்ள தகவல்கள் தவறு என நிரூபிக்கப்பட்டால், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் என்மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளலாம் எனவும், மேலும் இவ்விருது தேர்வுமுறை குறித்து இந்நிறுவனத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் எனவும் இதன்மூலம் உறுதி அளிக்கின்றேன்.

இத்துடன் 2025–26–ஆம் ஆண்டு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது தேர்வுக்காக வைக்கப்பட்டிருக்கும் மேற்குறிப்பிட்டுள்ள கைவினைப்பொருளுக்கு, போட்டி தொடர்பான நடவடிக்கைகளினாலோ மற்றும் போக்குவரத்தினாலோ சேதாரம் ஏதும் ஏற்பட்டால், இது எனது சொந்த பொறுப்பில் ஏற்பட்டதாக ஏற்றுக்கொள்கிறேன் என்று உறுதியளிக்கிறேன்.

பெயர் :

விலாசம் :

கைவினைஞரின்
கையொப்பம் :

தேதியுடன் :

/சான்றளிக்கப்படுகிறது/

**Notary Public**
**Signature with Seal**

Poompuhar
Hand in hand with our artisans...

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்**
**759, அண்ணா சாலை, சென்னை–600 002.**

**வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது தேர்வுக்கான விதி முறைகள்**

1. நமது தமிழ்நாட்டில் கைத்திறத் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷம்" என்ற இவ்விருது வழங்கப்படும். கைவினைஞர்களை நாட்டின் பொக்கிஷமாக அறிவிக்கும் இவ்விருது இந்தியாவில் முதன் முறையாக வழங்கப்படுகிறது.
2. 65 வயது நிரம்பிய திறன்மிகு கைவினைஞர்கள் இவ்விருதிற்காக விண்ணப்பிக்க தகுதியுடைவர்கள்.
3. ஆண்டொன்றிற்கு 10 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.1,00,000/– ரொக்கப் பரிசும், 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கமும், ஒரு தாமிரப் பத்திரமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும். 2025–26–ஆம் ஆண்டிற்கு 10 கைவினைஞர்கள் தேர்வு செய்யப்படுவர்.
4. கைவினைஞர்களின் அனுபவம் மற்றும் அவர் தம் தொழிலில் ஆற்றியுள்ள சேவை போன்ற சிறப்பு அம்சங்கள் தேர்வின்போது கவனத்தில் கொள்ளப்படும்.
5. தமிழ்நாட்டைச் சேர்ந்த கைவினைஞர்கள் மட்டும் இத்தேர்வில் கலந்துகொள்ளலாம்.
6. தேர்வில் கலந்துகொள்ளும் கைவினைஞர்கள் விருது தேர்வுக்கான கைவினைப்பொருள், விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றிதழ், புகைப்படம் மற்றும் ஆவணங்களை விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி, இணைத்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப வேண்டும்.
7. விண்ணபத்தை அனுப்பும்போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய வழி முறைகள்.
   - விண்ணப்பம் மற்றும் விண்ணப்பங்களுடன் இணைத்துள்ள அனைத்து ஆவணங்களும் A4 அளவு தாளில் இருக்க வேண்டும்.
   - அனைத்து ஆவணங்களும் பக்க எண் இடப்பட்டு, ஸ்பைரல் பைண்டிங் (Spiral Binding) செய்யப்படவேண்டும்.
   - மேற்கண்ட அனைத்து விவரங்களும் குறுந்தகட்டிலும் (CD) பதிவு செய்து அனுப்பப்படவேண்டும்.
   - பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பதாரருக்கு அருகிலுள்ள பூம்புகார் விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்கள் மூலமாக மட்டுமே அனுப்பப்படவேண்டும்.
   - பரிந்துரைச் சான்றிதழில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். (கைத்திறன் தொழில் பெயர் மற்றும் கைவினைப் பொருட்களின் பெயர்)
   - உதாரணம் :
   - கைத்திறன் தொழில் பெயர் : பஞ்சலோக சிற்பம் / மரச்சிற்பம்,
   - கைவினைப் பொருட்களின் பெயர் : விநாயகர் / நடராஜர் / வேணுகோபால்
   - விருதுகளுக்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அனைத்து உதவிகளையும் பூம்புகார் விற்பனை மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்கள் செய்து கொடுப்பார்கள்.
   - மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள பூம்புகார் விற்பனை மற்றும் உற்பத்தி நிலைய மேலாளர்களை தொடர்பு கொள்ளவும்.
8. விருதிற்குரிய பொருளை சமர்ப்பிக்கும்போது நூறு ரூபாய் முத்திரைத் தாளில் கைவினைஞரின் உறுதிமொழிப்பத்திரம் முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பத்துடன் கொடுக்கப்படவேண்டும்.
9. **விருதுக்கான பொருள் போட்டி தொடர்பான நடவடிக்கையினால் சேதம் அடைந்தால் அதற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது. அதற்கான நஷ்ட ஈடும் வழங்காது.**
10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன், விருது தேர்வுக்கான கைவினைப் பொருட்கள் எங்களது அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய **கடைசி நாள் 29.08.2025 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணி வரை** (அலுவலக நாட்கள் – திங்கள் முதல் வெள்ளி வரை).